# சுபீட்சம்

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 04.07.2023 supeedsam.com supeedsam@gmail.com


# போர் நடந்த இடங்களில் புதைகுழிகள் இருக்கும்!



முல்லைத்தீவில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான அகழ்வு நடவடிக்கை சர்வதேச மேற்பார்வையில் நடைபெறவேண்டும் என்ற தமிழ்த் தரப்பின் கோரிக்கைகள் தொடர்பில் நேரடியாகப் பதிலளிப்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் நீதி அமைச்சர் விஜயதாஸ ஆகியோர் தவிர்த்துள்ளனர்.

அத்துடன் ''போர் இடம்பெற்ற பகுதிகளில் புதைகுழிகள் இருக்கத்தான் செய்யும்'' என்று நீதி அமைச்சர் அலட்சியமாகக் கருத்து வெளியிட்டுள்ளார்.

முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மத்தியில் பச்சை சீருடைகள், பெண்களின் உள்ளாடைகள் என்பனவற்றுடன் பல்வேறு மனித எச்சங்களும் கடந்த 29ஆம் திகதி

02 ஆம் பக்கத்தில்...

# தமிழ் தேசிய கூட்டமைப்பை கைப்பற்ற ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி எடுத்த முயற்சி

## தேர்தல் ஆணைக்குழு மறுப்பு!

தமிழ் தேசிய கூட்டமைப்பை கைப்பற்ற ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி எடுத்த முயற்சிக்கு இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு மறுப்புத் தெரிவித்து விட்டது.

ஆர்.ராகவனை செயலாளராக் கொண்டு பதிவு செய்யப்பட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பெயரில் உள்ள ஜனநாயகத்தை நீக்கி தமிழ்த் தேசியக் கூட்டணி என மட்டும் செயல்படவும் அதனை ஆங்கிலத்தில் கூ.மீ.அ என உச்சரிக்கவும் தேர்தல்கள்

02 ஆம் பக்கத்தில்...



# ரணில் நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை கைப்பற்றியுள்ளார்

நாடாளுமன்றத்தை செயலிழக்க செய்து, அதன் அதிகாரங்களை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கைப்பற்றியுள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் முஜிபுர் ரஹ்மான் இதனை கூறியுள்ளார். நாடாளுமன்றத்தின்

02 ஆம் பக்கத்தில்...



# அரசாங்கத்தின் செயற்பாடுகளால் நாட்டு மக்களுக்கு குப்பை மட்டுமே மிஞ்சும்

தற்போதைய ஆட்சியாளர்கள் நாட்டை வீழ்ச்சியடையச் செய்து வருவதாக கொழும்பு பேராயர் கார்த்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில் 2048 ல் அபிவிருத்தி அடைவோம் என்ற பொய்யான கருத்தை வெளியிட கூடாது என்றும் கூறியுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொய்யான வாக்குறுதிகளை எங்களுக்குக் கொடுக்காதீர்கள், ஜனாதிபதி அவர்களே. இது 2024 வரை நீடித்தால் இந்த நாடு அழிந்துவிடும். 20 வீதமான மக்கள் நாட்டின் அனைத்து வளங்களையும் எடுத்துக் கொண்டுள்ளனர். 80 வீதமான மக்களுக்கு சரியான உணவைப் பெற முடியவில்லை. கொழும்பு

02 ஆம் பக்கத்தில்...



# மக்களின் அதிகாரத்தை அமைச்சருக்கு பகிர முயற்சிக்கும் ஜனாதிபதி

உள்ளூராட்சி சபைகள் அமைச்சருக்கு மக்கள் இறையாண்மை அதிகாரத்தை பகிர ஜனாதிபதி மோசமான முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கலைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு மீண்டும் உயிரூட்டும் அதிகாரம் அமைச்சருக்கு வழங்கப்படுவது

02 ஆம் பக்கத்தில்...



# வேடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் விக்கிர உடைப்புக்கும் இந்து பௌத்த சங்கத்திற்கும் நேரடி சம்மந்தம்!

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தினுடைய விக்கிர உடைப்புக்கும் இந்து பௌத்த சங்கத்திற்கும் நேரடி சம்மந்தம் இருப்பதாக நாம் குற்றம் சாட்டுகின்றோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் வவுனியா மாவட்ட செயற்பாட்டாளர் எஸ்.தவபாலன் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் அண்மைக்காலமாக ஒரு அமைப்பு செயற்பட்டு வருகின்றது. அந்த அமைப்பு தொடர்பாக முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்தமைக்காக இன்றைய தினம் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளேன்.

இந்து பௌத்த சங்கம் என்ற பெயரில் அண்மைகாலமாக

02 ஆம் பக்கத்தில்...









# ஏழுமலையில் கேப் ரக வாகனம் கவிழ்ந்து விபத்து

கதிர்காமத்தில் ஏழுமலைக்கு பக்தர்களை அழைத்துச் சென்ற கெப் ரக வாகனம் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டுள்ளது.

ஏழுமலையின் மேல் தளத்தில் இருந்து கீழ் தளம் நோக்கி பயணித்த கெப் ரக வாகனமே விபத்துக்குள்ளானது.

விபத்து இடம்பெற்ற போது வாகனத்தில் 07 பெண்களும் 10 வயது சிறுமியும் இருந்துள்ளனர்.

இந்த விபத்தில் சாரதிக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை எனவும், ஏனையவர்கள் சிறு

02 ஆம் பக்கத்தில்...

## திருமலை கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் 02 ஆம் ஆண்டு நிறைவு விழா



(எப்.முபாரக் )

திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் 02ஆம் ஆண்டு நிறைவு விழா (02) இறுதி ஈழப் போரின் தொடக்கமாக சேருவில மாவில்ஆறு அணைக்கட்டில் கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திரு.ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க தலைமையில் இடம்பெற்றது.

மற்றுமொரு அதிதியாக 'இளைஞர் அபிவிருத்தி அஹம்' மாவட்ட இணைப்பாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் பொன்னத்துரை சச்சிவானந்தம் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் இதில் தலைவர் அமதோர அமர்ஜீவ வரவேற்புரை ஆற்றினார். செயலாளர் உபாலி மனுசங்க காரியவசம் கூட்ட அறிக்கைகளை சமர்ப்பித்ததுடன் வருடாந்த வரவு செலவுத்திட்டம் பொருளாளர் எப்.முபாரக்கினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன் போது அழைக்கப்பட்ட அதிதிகள் வருகை தந்ததுடன் செயலாளர் உபாலி மனுசங்க காரியவசம், முன்னாள் அழைப்பாளர் திரு.சுகத் விஜேகுமார ஆகியோர் அதிதிகளை வரவேற்றனர்.

ஊடக டிசேட்டுகள், ஆண்டு விழாவுக்கான விசேடமாக பொறிக்கப்பட்ட கிட்டெக் மற்றும் முக்கியமான புத்தகங்கள் பத்திரிகையாளர்களுக்கு அழைக்கப்பட்ட விருந்தினர்களால் வழங்கப்பட்டது.

பிரதம செயலாளர் ஆண்டுவிழா அதிதி உரையை ஆற்றிய பின்னர், சிரேஷ்ட ஊடகவியலாளர்களான திரு.ஓ.கியாஸ் சாபி மற்றும் திரு.சமன் மல்லவராச்சி ஆகியோர் பிரதம செயலாளருக்கு நன்றிகளை தெரிவித்தனர்.

அதிதிகள் சென்ற பின்னர், கங்கத்தலாவ ஊடகவியலாளர்கள் மதிய உணவில் கலந்து கொண்டனர்.

'டிசேட்டுகளை எம்.எச்.எம்.பவுண்டேசன் அமைப்பின் பணிப்பாளர் மஸாஹிர் அவர்களினால் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## மருத்துவர் சௌந்தரராஜன் திருமலை றோட்டரிக் கழகத்தின் 45 ஆவது தலைவராக பதவியேற்பு





(அ . அச்சுதன்)

திருகோணமலை ரோட்டரி கழகத்தின் 45 ஆவது தலைவராக. மருத்துவர்ச சௌந்தரராஜன் அவர்கள் பதவி ஏற்க்கும் நிகழ்வு டைக் வீதியில் உள்ள றோட்டரி அலுவலகத்தில் 02.07.2023 - ஞாயிற்று கிழமை மாலை 6.30 மணிக்கு இடம் பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மருத்துவர் N வர்ணகுலேந்திரன் - கிழக்கு பல்கலைக்கழக திருகோணமலை வளாக சிரேஷ்ட விரிவுரையாளர் கலந்து கொண்டார்.

இவ் வைபவத்தில் திருகோணமலை ரொட்டறி கழக தலைவர் நா. கிட்னதாஸ், கழகம் சார்பில் வரவேற்பு உரை நிகழ்தினார். அவரது காலத்தில், திருகோணமலை ரோட்டரி கிளப் சிறப்பாக செயல் பட்டதாகவும் அதட்கு உதவிய தனது குழு உறுப்பினர்களுக்கு நன்றி கூறி கௌரவித்தார்.

செயலாளர் கு. ஜெய்சங்கர் 2022 - 2023 ஆண்டில் திருகோணமலை ரோட்டரி கழக நடவடிக்கைகள் பற்றி ஒரு சுருக்கமான விளக்கத்தை கொடுத்தார்.

இவ் நிகழ்ச்சியில் பௌசி ராஜீவ் என்ற ஒரு நோயாளிக்கு மருத்துவ உதவியாக 30,000/= ரூபா கையளிக்கப் பட்ட்து.

பிராஜ் கண்ட்ரி மண்டல், LANKA IOC PLC, Trincomalee, சார்பில் 360,000/= ரூபா மான்களுக்கான உணவு அளிக்கும் செயல் பாட்டுக்கு வழங்கப் பட்ட்து. இதன்போது கடந்த ஆண்டின் தலைவர் நா. கிட்னதாஸ் புதிதாக தெரிவான தலைவர் மருத்துவர் ண். சௌந்தரராஜன் அவர்களுக்கு தலமைப்பதவியை வழங்கி வாழ்த்து தெரிவித்தார்..

பிரதம விருந்தினர் மருத்துவர் மீ வர்ணகுலேந்திரன் அவரது உரையில் றோட்டரிக் கழகம் இன்னலுற்ற மக்கள் மத்தியில் சிறந்த சேவை புரிவதாக பாராட்டினார். மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் பொருளாதார நிலையில் தேவை உள்ள மனிதர்களுக்கு, மற்றவர்களுடன் இணைந்து உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

## மன்னாரில் நன்னீர் மீன்பிடிக்காகச் சென்ற இரு மீனவர்கள் சடலமாக மீட்பு

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் கட்டுக்கரைக்குளத்தில் ஒரு படகில் மீன்பிடிக்கச் சென்ற இரு மீனவர்கள் நீரில் மூழு;கிய நிலையில் சடலமாக மீட்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் ஞாயிற்றுகடகிழமை (02) இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரிவிக்கப்படுவதாவது; மன்னார் பறப்பாங்கண்டல் குருவில் வசந்தபுரத்தில் வசித்த இரு குடும்பஸ்த மீனவர்கள் மன்னார் கட்டுக்கரைக்குளத்தில் நன்னீர் மீன்பிடிக்காக ஒரு படகில் ஞாயிற்றுக் கிழமை (02) பிற்பகல் 5 மணிக்கு சென்றுள்ளனர்.

இவர்கள் வழமையாக இரவு 7 மணிக்கு வீடு திரும்பிவிடுவர் எனவும் ஆனால் இவர்கள் சம்பவத் தினத்தன்று குறிப்பிட்ட நேரத்தில் கரை திரும்பாததால் இவர்கள் கட்டுக்கரைக்குளத்தில் தேடப்பட்டனர்.

அப்பொழுது திங்கள் கிழமை (03) காலை ஒருவரையும் மாலை மற்றவரையும் சடலமாக கரை சேர்க்கப்பட்டுள்ளனர்.

இறந்தவர்கள் விசுவா நிமால் (வயது 57) எனவும் மற்றையவர் மூன்று பெண் பிள்ளைகளுக்கும் ஒரு ஆண் பிள்ளைகளுக்கும் தந்தையான விசுவாசம் சந்திரகுமார் பர்ணாந்து (வயது 37) எனவும் அடையாளம் காட்டப்பட்டுள்ளனர். இவர்கள் சென்ற படகும் தண்ணீருக்குள் கவுண்ட நிலையிலும் ஒருவரின் சடலம் படகுக்குள்ளும் காணப்பட்டதாக ஆரம்ப விசாரனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் சடலங்கள் உடல்கூற்று பரிசோதனைக்காக மன்னார் பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதுடன் இது தொடர்பாக உயிலங்குளம் பொலிசார் விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஏழுமலையில் கெப் ரக வாகனம் கவிழ்ந்து விபத்து

காயங்களுடன் கதிர்காமம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் வவுனியா மற்றும் திருகோணமலையை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதிக்கு கெப் ரக வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமையால் இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் கதிர்காமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மக்களின் அதிகாரத்தை அமைச்சருக்கு....

மோசடியானது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, உள்ளூராட்சி சபை தேர்தலை ஒத்திவைத்து தன்னிச்சையாக செயற்பட்டு வரும் அதே வேளை புதிய மோசடிக்கு தயாராகி வருகிறார்.

கலைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு மீண்டும் உயிரூட்ட அரசியலமைப்பில் திருத்தங்களை செய்வதற்காக தனிப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரேரணை ஒன்றை கடந்த 23 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிட்டுள்ளனர். 12 மாதங்களுக்கு உள்ளூராட்சி சபைகளின் பதவி காலத்தை நீடிப்பதற்காகவே அவசரமாக உள்ளூராட்சி சபைகள் சட்டத்தில் திருத்தங்டகளை கொண்டு வர முயற்சிக்கின்றனர். தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்திற்கு அமைய உள்ளூராட்சி சபைகள் அமைச்சருக்கு அந்த சபைகளின் பதவிக்காலத்தை 5 மாதங்கள் மாத்திரமே நீடிக்க முடியும்.

அந்த சட்டத்தை திருத்தி கூடுதலான காலத்திற்கு பதவிக்காலத்தை நீடிப்பதற்காக அமைச்சருக்கு அதிகாரத்தை வழங்கும் முயற்சியில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார் எனவும் ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

## ரணில் நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை...

அதிகாரங்களை ஜனாதிபதிக்கு வழங்கும் யோசனை நாடாளுமன்றத்தில் சனிக்கிழமை முன்வைக்கப்பட்டது.

சனிக்கிழமை நாடாளுமன்றம் கூட்டப்படும் என ஜனாதிபதி பிரான்ஸ் சென்றிருந்த போது ஊடக சந்திப்பொன்றில் கூறியிருந்தார்.

சாதாரண சம்பிரதாயங்களுக்கு அப்பால் சென்று அவசர வேலை ஒன்றுக்கு தயாராகி வருவதாக உலகத்திற்கு காட்டி நாடாளுமன்றத்தை கூட்டினார்.

கடன் மறுசீரமைப்பது தொடர்பான பிரேரணை ஒன்றை கொண்டு வந்து அது தொடர்பாக விவாதம் நடநத்தப்படும் என்றே அரசாங்கம் முதலில் கூறியது.

நிதி அதிகாரங்கள் தொடர்பில் எவ்வித வரையறைகளும் இன்றி முடிவுகளை எடுக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்குவதற்காகவே நாடாளுமன்றம் அவசரமாக கூட்டப்பட்டது.

பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். நாடாளுமன்றம் 4 ஆம் திகதி கூடவிருந்த நேரத்திலேயே அவசரமாக நாடாளுமன்றத்தை கூட்டினர்.

சாதாரணமாக நாடாளுமன்றம் கூடும் போது ஒரு கோடி ரூபாவுக்கும் மேல் செலவாகும்.

சுமார் 2 ஆயிரம் ஊழியர்கள் இருக்கின்றனர். சனிக்கிழமை என்பதால், ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவை வழங்க வேண்டும்.

நாடு வங்குரோத்து அடைந்துள்ளதாக கூறுகின்றனர். உலகம் முழுவதும் கடனை கேட்டு பிச்சை எடுக்கின்றனர்.

ஈரத்துணிகளை கட்டிக்கொள்ளுமாறு மக்களுக்கு கூறிவிட்டு, இவர்கள் சனிக்கிழமை நாடாளுமன்றத்தை கூட்டுகின்றனர்.

செவ்வாய் கிழமை பிரேரணையை நிறைவேற்றி இருக்கலாமே ஏன் இந்த அவசரம்.

நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற வகையில் அவருக்கு அதிகாரங்கள் இருக்கின்றன. நாடாளுமன்றத்திற்கு அரசியலமைப்பு பீதியான அதிகாரமும் நிதி அதிகாரமும் இருக்கின்றது.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தின் நிதி அதிகாரத்தை பெற்றுக் கொண்டுள்ளார்.

இதனால், நாடாளுமன்றம் நிதி அதிகாரத்தை இழந்துள்ளது. தற்போது நாடாளுமன்றத்தினால், எந்த பயனுமில்லை எனவும் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

## வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின்....

ஆலயங்களின் திருவிழாக்களில் நிர்வாகத்தினரின் அனுமதியின்றி ஆலயங்களில் பதாதை ஒன்று கட்டப்பட்டு வருகின்றது. இந்து பௌத்த சங்கம் என்று இயங்கும் அமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியை பின்புலமாக கொண்ட அமைப்பு. குருமன்காடு பிள்ளையார் ஆலயத்தின் முன்னால் இருந்த தாகசாந்தி நிலையத்தில் கூட இந்த அமைப்பு தனது பதாதையை போட்டிருந்தது.

இதை நான் அவதானித்து எனது முகப்புத்தகத்தில் ஒரு அரசியல் செயற்பாட்டாளராக பொது மக்களுக்கான பொது பிரச்சனை என்ற அடிப்படையில் எனக்கு இருக்கும் கருத்து சுதந்திரத்திற்கு அமைய முகப்புத்தகத்தில் இந்த இந்து பௌத்த சங்கம் என்கின்ற அமைப்பு தேவையற்ற வகையில் தமிழர்களுடைய சைவ ஆலயங்களில் இந்த பதாதைகளை தொங்கவிடுவது பௌத்தமயமாக்கலை ஏற்படுத்துவதற்காகவும், தேவையற்ற வகையில் மதங்களுக்கு இடையில் பிரச்சனையை ஏற்படுத்தவும் என்ற அடிப்படையில் பதிவேற்றியிருந்தேன்.

அதற்காக இந்த அமைப்பு சார்ந்து இயங்கும் சில நபர்கள் வவுனியா பொலிசில் முறைப்பாடு செய்து விசாரிக்கப்பட்டது. அதற்கான வாக்குமூலம் பெறப்பட்டது. உண்மையில் இந்த அமைப்பு அண்மைக்காலமாக கணிசமான ஆலயங்களில் இந்த பதாதைகளை தொங்கவிடுவதை காண்கின்றோம்.

முற்றுமுழுதாக தமிழர் தாயகத்தில் ஒரு பௌத்த மயமாக்கலை மேற்கொள்வதற்காக திட்டமிட்டு இயங்கும் அமைப்பாக குற்றம் சாட்டுகின்றோம். வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தினுடைய விக்கிர உடைப்புக்கும் இந்த அமைப்புக்கும் நேரடி சம்மந்தம் இருப்பதாக நாம் குற்றம் சாட்டுகின்றோம்.

அந்த அடிப்படையில் இந்த அமைப்பினுடைய செயற்பாடுகள் தமிழர் தாயகத்தில் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் பௌத்தமயமாக்கலை செய்வது தான். அதனை நியாயமான முறையில் பதிவேற்றியிருந்தேன். உண்மையில் நாங்கள் பௌத்த மத்திற்கோ, அதன் இனத்திற்கோ எதிரானவர்கள் இல்லை. பௌத்தம் போதிக்கும் சிந்தனைகளை சிங்களவர் பின்பற்றி இருந்தாலே தமிழர் தாயகத்தில் இவ்வாறான ஆக்கிரமிப்புக்கள் நடைபெறாது என்பது எங்களுடைய கருத்து.

தேவையற்ற விதத்தில் சைவ ஆலயத்தில் பௌத்த மதத்தை சேர்க்க வேண்டிய தேவை என்ன? சைவ ஆலயங்களில் சரியான முறையில் திருவிழாக்கள் நடைபெறுகின்றது. இங்கு ஏன் இந்த அமைப்பு? எதற்கு வந்து தாகசாந்தி, சாப்பாடு வழங்குவதாக செயற்படுவது. திட்டமிட்டு பௌத்தமயமாக்கலுக்கும், விகாரைகளை கட்டுவதற்குமான செயற்பாடுகளை நகர்த்துவதற்கே.

இன்று ஆளும் கட்சியாக இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க அவர்களின் ஐக்கிய தேசிய கட்சியை பின்புலமாக கொண்டு மிக விரைவாக இந்த செயற்பாடு இடம்பெறுகின்றது. ரணில் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் தான் இது தீவிரமாக நடைபெறுகிறது. பௌத்தமயமாக்கலை செய்வதற்காகவும் மத நல்லிணக்கம் என்ற பெயரில் பௌத்தத்தை முன்னிலைப்படுத்துவதற்காகவே இந்த அமைப்பு செயற்படுகிறது. பொலிசாரின் வாக்குமூலத்திலும் இதனை தெளிவாக குறிப்பிட்டுள்ளேன்.

வவுனியா, குருமன்காடு சித்தி விநாயகர் ஆலயத்தின் தாகசாந்தி நிலையத்தில் இந்த அமைப்பின் பதாதை அனுமதி பெறாது தொங்கவிடப்பட்டிருந்த நிலையில் ஆலயத்தின் உப செயலாளர் அதனை அகற்றியிருந்தார். அவர் பொலிசாரின் துணையுடன் மிரட்டப்பட்டு ஆலயநிர்வாக அனுமதி இல்லாமல் மீளவும் பதாதைகளை கட்டியுள்ளார்கள். நந்திக் கொடிகள் காணப்பட்ட இடத்தில் வீதிக்குரிய இடம் எனக் கூறி அப் பதாதை கட்டப்பட்டுள்ளது. இதனை ஏற்க முடியாது.

வவுனியாவில் வெடிவைத்தகல்லை ஆக்கிரமித்து கச்சல்சமனங்குளம் என்ற பெயரில் புதிய விகாரை அமைக்கப்பட்டுள்ளது. தையிட்டியில் தனியார் காணியில் அடாத்தாக விகாரை கட்டப்பட்டுள்ளது.

குருந்தூர் மலையில் நீதிமன்ற தீர்ப்பை மீறி விகாரை கட்டப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழர் தாயகத்தில் பௌத்த வல்வளைப்பு நடைபெற்று வரும் நிலையில் வவுனியா மாவட்டத்தில் பௌத்தமயமாக்கலை செய்ய இந்த அமைப்பு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

வவுனியாவில் பல நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான அமைப்பின் ஊடக ஐக்கிய தேசிய கட்சி பௌத்த மயமாக்கலை செய்ய முயல்கிறது. இதனை அனுமதிக்க மாட்டாம். அனுமதிக்கவும் முடியாது. நான் போட்ட பதிவு தொடர்பில் சவாலுக்கு உட்படுத்துகின்றோம். முடியுமானால் நீதிமன்றத்தின் ஊடாக இந்த விடயத்தை கையாளுங்கள். அதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

பௌத்தமயமாக்கலுக்கு நாம் ஒரு போதும் துணை போக மாட்டோம் என்பதை பொறுப்பான இயக்கம் என்ற அடிப்படையில் பதிவு செய்கின்றேன் எனத் தெரிவித்தார்.

## தமிழ் தேசிய கூட்டமைப்பை கைப்பற்ற ஜனநாயக

ஆணைக் குழுவிற்கு எழுத்தில் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பத்தை 2023 மே மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்ற தேர்தல்கள் ஆணைக் குழுவின் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

இதே பெயரில் வேறு கட்சி நீண்ட காலமாக இயங்குவதனால் இந்த சொல்லாடல் இடம் பெறும் வகையிலான பெயரிற்கு அனுமதிக்க முடியாது என தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்து குறித்த கட்சிக்கு தற்போது எழுத்தில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

ஜனாநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் தற்போது 5 கட்சிகள் கூட்டாக இயங்குவதோடு 5 கட்சிகளின் தலைவர்களும் இணைத் தலைவர்களாக இயங்கும் நிலையில் ரி.என்.ஏ ஆரம்பிக்கும்போது இருந்த 5 கட்சிகளில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் இரு கட்சிகளும் இந்த கூட்டணியில் இருப்பதனால் அந்தப் பெயர் தமக்கே சொந்தம் என கூறிவந்த நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழு அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டது.

இதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என அனைவரும் இணங்கி தமிழ் அரசுக் கட்சியின் பெயரில் பயன்படுத்தவே ஒப்புதல் வழங்கியதனால் அந்தக் கட்சியின் சின்னத்திற்கே இப் பெயரை பயன்படுத்த முடியும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு பதிலளித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தமிழ் அரசுக் கட்சி வெளியேறி விட்டதாக ரெலோவும், புளொட்டும் அறிவித்து தம்முடன் ஈ.பி.ஆர்எல். எவ், தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவற்றையும் இணைத்துக்கொண்டு தாமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என கூறினர்.

இதற்கமையே இக் கட்சியினால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பிக்கப்பட்ட நிலையில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என பயன்படுத்த முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## அரசாங்கத்தின் செயற்பாடுகளால் நாட்டு மக்களுக்கு குப்பை ...

துறைமுகம் டிகோவிட்ட வரை நீடிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. தற்போது அரசாங்கம் துறைமுகத்தை கட்டுப்படுத்த முடியாமல் பல்வேறு நாடுகளுக்கு விற்பனை செய்கின்றது.

தற்போதுள்ள துறைமுகம் துண்டு துண்டாக விற்கப்படுகிறது. இந்த மனிதன் என்ன கனவு காண்கிறான்? அவருடைய இலக்கு என்ன? இதுதான் இலக்கு.

முத்துராஜவெல முழுவதையும் அழித்து விட்டு, இவற்றை வெளியூர்களுக்கு விற்று, சாப்பிட்டு, குடித்து, உல்லாசமாகச் செத்துவிடுவார்கள்.

நாட்டு மக்களுக்கு குப்பை மட்டுமே மிச்சமாகும். இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இந்த நடவடிக்கை தொடருமானால் 2048 ஆம் ஆண்டளவில் நாடு அழிந்துவிடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## போர் நடந்த இடங்களில் புதைகுழிகள் இருக்கும்!

மீட்கப்பட்டிருந்தன. இது தொடர்பான மேலதிக அகழ்வுகள் எதிர்வரும் 6ஆம் திகதி நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தப் புதைகுழி அகழ்வு சர்வதேச மேற்பார்வையில் – பங்கேற்புடன் முன்னெடுக்க வேண்டும் என்று தமிழ்த் தரப்பால் வலியுறுத்தப்படுகின்றது. இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று ஜனாதிபதி மற்றும் நீதி அமைச்சரிடம் கேள்வி எழுப்பியது.

**ஜனாதிபதி ரணில்**

'இந்த விடயத்தை ஊடகங்கள் வாயிலாக அறிந்தேன்.

நீதிமன்றத்தின் முன் பாரப்படுத்தப்பட்டுள்ளது இந்த விவகாரம். நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய அடுத்தகட்டப் பணிகள் இடம்பெறும். இதைவிட மேலதிகமாக எந்தக் கருத்தையும் தெரிவிக்க விரும்பவில்லை.' – என்றார்.

**நீதி அமைச்சர் விஜயதாஸ**

'போர் இடம்பெற்ற பகுதிகளில் புதைகுழிகள் இருக்கத்தான் செய்யும். அவற்றைத் தோண்டும் போது சடலங்களும் ஆயுதங்களும் மீட்கப்படும். முல்லைத்தீவு புதைகுழியிலிருந்து போரில் ஈடுபட்ட ஒருதரப்பின் சீருடைகள் மீட்கப்பட்டதாக அறிந்தேன். நீதிமன்றம் அந்தப் புதைகுழியை அகழ்வதற்கான உத்தரவையும் விடுத்துள்ளது.

அடுத்த கட்டச் செயற்பாடுகள் தொடர்பில் இப்போது எல்லாம் பதிலளிக்கமுடியாது. அதே வேளை அந்தப் புதைகுழி விவகாரம் தொடர்பில் கருத்துக்களை வெளியிடுபவர்களுக்கும் என்னால் பதில் கூற முடியாது.' – என்றார்.

# தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் கூட இவ்வாறான தன்னினச் சேர்க்கையாளருக்கு ஆதரவு வழங்கப்பட்டிருக்கவில்லை

**(பாறுக் ஷிஹான்)**

தன்னினச் சேர்க்கையாளர்களின் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபாடு காட்டுவதை வன்மையாக கண்டிக்கின்றோம். திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்ற கட்சி வெளிநாட்டு நிதிகளை பெற்று இவ்வாறான விடயங்களை ஊக்கவிப்பதாகவே நாங்கள் அறிகின்றோம். இவ்வாறான கட்சிகளை மக்கள் எதிர்வரும் காலங்களில் நிராகரிப்பார்கள் என நாம் நம்புகின்றோம். இந்த கட்சிக்கு மக்கள் கொடுத்த சிறு ஆணையானது மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தவதற்கு தான். ஆனால் இவ்வாறான விடயங்களில் குறித்த கட்சியானது ஈடுபடாது மக்கள் நலனில் அக்கறை காட்ட முன்வர வேண்டும் என அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் வருத்தம் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனையில் இன்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்;

சிறிய நாடான இலங்கையில் பல கலாச்சாரங்கள் உள்ளன. இங்கு இந்து பௌத்தம் இஸ்லாம் ஆகியவை சமயங்களாகும். இச்சமயங்கள் ஏற்றுக்கொள்ளாத தன்னினச் சேர்க்கையாளர்களின் நடவடிக்கைகளை இலங்கை சட்டத்தில் தற்போது உட்புகுத்த அவசியமில்லை. இவ்வாறான விடயங்களை வெளிநாடுகளில் இயங்கும் சில தரப்பினர் இலங்கைக்குள் திணிக்கப்பார்க்கின்றனர். இந்த அரசாங்கமும் அந்த பணத்தில் ஆடிக் கொண்டு இருக்கின்றனர்.

இந் நடவடிக்கைகளை வெளிநாட்டினரின் திருப்திக்காக இலங்கைக்குள் திணிக்கப் பார்க்கின்றனர். இவ்வாறான விடயங்களை நாங்




கள் எதிர்க்கின்றோம். மக்களுக்கு தேவையான விடயங்களை நாங்கள் செய்ய வேண்டும். மக்கள் இன்று பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு உணவின்றி எத்தனையோ பேர் தற்கொலை செய்துள்ளார்கள் என ஊடகங்கள் வாயிலாக அறிந்துள்ளோம். அவ்வாறான சூழ்நிலை இலங்கையில் உருவாகி வருகின்றது. அரசாங்கம் பைத்திகாரத்தனமாக வேலைகளில் ஈடுபடாமல் மக்கள் நலனில் ஈடுபடுமாறும் இவ்வாறான தன்னினச் சேர்க்கையாளர்களின் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபாடு காட்டுவதை வன்மையாக கண்டிக்கின்றோம்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் கூட இவ்வாறான தன்னினச் சேர்க்கையாளருக்கு ஆதரவு வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் தங்களுடைய அரசியல் இலாபங்களுக்காகவும் தங்களது கட்சியை வளர்ப்பதற்காகவும் இவ்வாறான செயற்பாடுகளை சமூகத்தின் மத்தியில் திணிக்கின்றனர். இச்செயற்பாட்டை மக்கள் மத்தியில் திணிக்க முற்படுகின்றவர்களுக்கு வடகிழக்கு மக்கள் தகுந்த பாடத்தை புகட்ட வேண்டும். தொழிற்சங்கம் என்ற ரீதியில் நாங்கள் இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றோம். ஏனெனில் கடந்த 33 வருடங்களாக வடகிழக்கு மக்களுக்கு நாங்கள் குரல் கொடுத்து வருகின்றோம். திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்ற கட்சி வெளிநாட்டு நிதிகளை பெற்று இவ்வாறான விடயங்களை ஊக்கவிப்பதாகவே நாங்கள் அறிகின்றோம். இவ்வாறான கட்சிகளை மக்கள் எதிர்வரும் காலங்களில் நிராகரிப்பார்கள் என நாம் நம்புகின்றோம். இந்த கட்சிக்கு மக்கள் கொடுத்த சிறு ஆணையானது மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தவதற்கு தான். ஆனால் இவ்வாறான விடயங்களில் குறித்த கட்சியானது ஈடுபடாது மக்கள் நலனில் அக்கறை காட்ட முன்வர வேண்டும் என கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம் என குறிப்பிட்டார்.

அண்மையில் தன்னினச் சேர்க்கையாளர்ககள் தங்களது உரிமைகளை வலியுறுத்தி கொழும்பு மற்றும் யாழ் மாவட்டங்களில் ஊர்வலங்கை நடாத்தி இருந்த நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் ஆதரவு அவர்களுக்கு தெரிவித்து வருவதாக சமூக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 25 லட்சம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் தீயிற்கு இரை

## கடற்படையினர் பெரும் சேதத்தை தடுத்தனர்



**( வாஸ் கூஞ்ஞ)**

தலைமன்னார் பியரில் இடம்பெற்ற மீன்பிடி உபகரணங்களுக்கான தீயினால் ஒரு மீனவன் பெரும் நஷ்டத்துக்கு உள்ளாகியபோதும் கடற்படையினரின் உதவியால் ஏனைய மீனவர்களின் பாதிப்பு தவிர்க்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் சனிக்கிழமை (01) இரவு 12 மணிக்குப் பிற்பாடு தலைமன்னார் பியர் கடற்கரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது;

தலமைன்னார் பியர் துறைமுகத்தை அண்டிய பகுதியில் கடற்கரையோரத்தில் 40 குதிரை வலுக் கொண்ட மீன்பிடி இயந்திரம் பொருத்தப்படடிருந்த ஒரு வெளிக்கள மீன்பிடி படகில்; அதனுடன் மீன்பிடி வலைத் தொகுதியும் இருந்த நிலையில் இழுத்து வைக்கப்பட்டிருந்த மீன் பிடி உபகரணம் தொகுதி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

மிகவும் ஒரு வறுமை கோட்டுக்குள் வாழும் தலைமன்னார் பியரைச் சேர்ந்த மீனவன் அப்துல் கனி அப்துல் ஹமீது என்பவரின் சுமார் 25 லட்சத்துக்கு மேற்பட்ட மீன்பிடி உபகரணங்களே இவ்வாறு தீயிற்கு இரையாகியுள்ளது. இந்த தீ சம்பவத்தை அறிந்து கடற்படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று அவற்றை தணிக்க முற்பட்டபோதும் அது பலளிக்காத நிலை காணப்பட்டதாகவும் ஆனால் இவ்விடத்தில் அயலில் இவ்வாறு காணப்பட்ட ஏனைய படகுகள் . இயந்திரங்கள் , வலைத் தொகுதிகளை கடற்படையினர் காப்பாற்றியதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக முறையீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இச்செயல் திட்டமிடப்பட்ட சம்பவமா என தலைமன்னார் பொலிசார் தீவிர விசாரனையில் ஈடுபட்டுள்ளனர் என பொலிசார் தெரிவித்தனர்.

# மறவன்புலவு சச்சிதானந்தம் வீட்டிற்கு சென்ற முன்னாள் ஜனாதிபதி





**(த.சுபேசன்)**

இலங்கையினுடைய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 02/07 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சிவசேனை தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் அவர்களுடைய தென்மராட்சி வீட்டிற்கு சினேகித பூர்வமான விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணத்திற்கு நான்கு நாட்கள் விஜயம் மேற்கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால மறவன்புலவு சச்சிதானத்தம் அவர்களுடைய அன்பான அழைப்பின் பேரில் வீடு தேடிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த சந்திப்பில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், சுதந்திர கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் சஜின் டிவாஸ் குணவர்த்தன மற்றும் அங்கஜன் இராமநாதனுடைய இணைப்புச் செயலாளர் கு.சிவராம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

# அறநெறிப்பாடசாலைக்கு அலுமாரி வழக்கி வைப்பு





**(ரக்ஸனா)**

அவுஸ்ரேலியாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கிவரும் வன்னிஹோம் எனும் தொண்டு நிறுவனம் இலங்கையில் அனைத்து இன மக்கள் மத்தியிலும் பல்வேறுபட்ட சமூகப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வந்தாறுமூலைக் கிராமத்திலுள்ள காட்டித்தந்த எண்கோணேஸ்வரர் அறநெறிப் பாடசாலைக்கு திங்கட்கிழமை (03.07.2023) சுமார் ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான அலுமாரி ஒன்றை வன்னிஹோப் நிறுவனம் அன்பளிப்புச் செய்துள்ளது. அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாசிரியர் எஸ்.அர்சுன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்சில் வன்னிஹோப் நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் எஸ்.றேகா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு அலுமாரியைக் கையளித்தனர்.

வன்னிஹோப் நிறுவனம் இலங்கையில் தமிழ், முஸ்லிம், மற்றும் சிங்கள மக்கள் மத்தியிலும், கல்வி, சுகாதாரம், வாழ்வாதாம், அறநெறிப் பாடசாலைகளுக்கு சத்துணவுத்திட்டம், உள்ளிட்ட பல செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மூன்று வருடங்களுக்கு மேலாக பிரதான நீர்க் குழாயில் வெடிப்பு கண்டுகொள்ளாத அதிகாரிகள்





**(எப்.முபாரக் )**

திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகாமம் நீர்ப்பாசன பொறியியலாளர் குட்பட்ட முள்ளிப்பொத்தானை கண்டி பிரதான வீதியில் மூன்று வருடங்களுக்கு மேலாக குடிநீர்குழாய் வெடித்து நீர் வீண் விரயமாகுவதாக மக்கள் குற்றச்சாட்டுகின்றனர்.

தொண்ணூற்றி ஆறாம் கட்டைக்கும் தொண்ணூற்று ஐந்தாம் கட்டைக்கும் இடையில் மூன்று வருடங்களுக்கு மேலாக கண்டி பிரதான வீதியில் உள்ள குடிநீர் குழாய் வெடித்து நீர் வீண் விரயமாவதாகவும் தெரிவிக்கின்றனர்.

தம்பலகாமம் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு பல முறை அறிவித்த பின் அதிகாரிகள் வந்து பார்வையிட்டு மேலிடத்துக்கு அறிவிப்பதாக தெரிவித்துவிட்டு செல்வதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் குடிநீர் விரைமாவதை தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்துமாறு மக்கள் கோரிக்கை தெரிவிக்கின்றனர்.

# நாராயணன் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம்!

**( வி.ரி. சகாதேவராஜா)**

இருநூறு வருடங்கள் தொன்மையான காரைதீவு பூமிதேவி ஸ்ரீதேவி சமேத ஸ்ரீமன் நாராயணன் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஏழாம் தேதி வெள்ளிக்கிழமை கருமாரம்பத்துடன் ஆரம்பமாகின்றது.

மறுநாள் எட்டாம் தேதி சனிக்கிழமை காலை முதல் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

ஞாயிற்றுக்கிழமை ஒன்பதாம் தேதி மகா கும்பாபிஷேகம் காலை 9 மணியளவில் கிழக்கின் பிரபல சிவாச்சாரியார் சிவாச்சார்யதிலகம் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் நடைபெறும்.

ஆலய பரிபாலன சபையின் தலைவர் இராசையா ஜெகநாதன் இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து வருகிறார்.

# இன்று கதிர்காமத்தில் தீர்த்தோற்சவம்

**( வி.ரி.சகாதேவராஜா)**

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழாவின் தீர்த்தோற்சவம் (4) செவ்வாய்க்கிழமை மாணிக்க கங்கையில் நடைபெறவுள்ளது.

கடந்த ஜூன் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய ஆடி வேல்விழா கடந்த 15 தினங்களாக லட்சக்கணக்கான பக்தர்கள் சகிதம் சிறப்பாக நடைபெற்று வந்தது.

நேற்று இரவு கதிர்காமம் பஸ்நாயக்க நிலமே டிசான் குணசேகர தலைமையில் பெரஹரா சிறப்பாக நடைபெற்றது.

அதேவேளை, உகந்தை மலை முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஜூலை 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி

தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே.

# மதத்தளங்கள் அமைந்துள்ள வீதியில் மதுபானவிற்பனை நிலையம் அமைவதை நிறுத்த பிரஜைகள் குழுவிடம் வேண்டுகோள்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் நகர் மக்கள் செறிந்து வாழும் பகுதியும் மதவழிபாட்டு தளங்கள் அமைந்துள்ள புனித செபஸ்தியார் பேராலய வீதியில் புதிதாக மதுபான விற்பனை நிலையம் திறக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதால் மாணவர்கள், இளைஞர்கள் நலன்கருதி இவற்றை உடன் தடைசெய்யுமாறு மன்னார் பேராலயம் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக மன்னார் பேராலயம் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மன்னார் நகரப்பகுதியில் புனித செபஸ்தியார் பேராலய வீதியில் அமைந்துள்ள டில்சான் கடைத்தொகுதியில் மதுபான விற்பனை நிலையமொன்று விரைவில் அமைப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு அறிந்து வரவிருக்கும் இச்சமூக ஆபத்தினை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

இம்மதுபான விற்பனை நிலையத்தினால் குறிப்பாக மாணவர்களின் இளமைப்பருவம் சீரழிக்கப்படுவதுடன் அவர்களின் கல்வி வளர்ச்சியும் அழிக்கப்படும் அபாயமும் உருவாகும் அச்சம் தோன்றியுள்ளது.

அத்துடன் இப்பிரதேச குடியிருப்புக்களில் வசிக்கும் ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கையில் பொருளாதார கஷ்டங்களும். சண்டை, சச்சரவுகளும் ஏற்படும் வாய்ப்பக்கள் அதிகமாக காணப்படும் நிலையும் உண்டு.

மேலும் இப்பகுதியில் பல்சமய மதவழிபாட்டு ஸ்தலங்களில் நடைபெறும் வழிபாடுகள் ஆராதனைகளுக்கு இடைஞ்சலாக அமையும்.

மேலும் இது சன நெருக்கடி அதிகமாகவுள்ள வீதியாகவும் உள்ளது. இவ்வீதியாலேயே அவசர நோய் காவு வண்டிகள் சேவைகளும் இடம்பெறுகின்றன.

ஆகவே இவ்வீதியில் மதுபானசாலை அமையும்போது மன்னார் அரச வைத்தியசாலை . தனியார் மருத்துவமனைகள் ஆகியவற்றிற்குச் செல்லும் நோயாளர்களுக்கு பல அசௌரியங்களும் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம் காணப்படும்.

ஆகவே இந்த மதுபான விற்பனை நிலையத்தை நிறுத்துவதற்குரிய நடவடிக்கையை மன்னார் பிரஜைகள் குழு உடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் வேண்டி நிற்கின்றோம் என இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மலையகத்தில் தோடர்ச்சியாக மழை
## நுவரேலியா - தலவாக்கலை பிரதான வீதியில் பல இடங்களில் மண்சரிவு



(செ.திவாகரன்)

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக நிலவி வரும் சீரற்ற வானிலையினை தொடர்ந்து பல இடங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளன.

(03) காலை நுவரெலியா தலவாக்கலை பிரதான வீதியில் நானு ஓயா கிளாரண்டன் பகுதியில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக இவ்வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டு ஒரு வழி போக்குவரத்தாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக நுவரெலியா தலவாக்கலை ஏ7 பிரதான வீதியில் பல இடங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டு, மண்திட்டுக்கள் சரிந்து வீழ்ந்துள்ளதுடன் கற்கள் புரளும் அபாயமும் காணப்படுவதனால் இவ்வீதியில் பயணிக்கும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறு அறிவுறுத்தப்படுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ச்சியான சீரற்ற வானிலை காரணமாக அடிக்கடி கடும் பனிமூட்டம் நிறைந்து காணப்படுவதனால் பிரதான வீதிகளை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக தங்களது வாகனங்களை செலுத்த வேண்டும் என போக்குவரத்து பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# மிக சிறப்பாக நடந்தேறிய மன்னார் மருதமடு அன்னையின் விழா






( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மறைமாவட்டத்தில் பெருவிழாவாகக் கொண்டாடப்படும் மருதமடு அன்னையின் ஆடிமாத விழா ஞாயிற்றுக்கிழமை (02) மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது.

கடந்த 23 ந்திகதி (23.06.2023) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஒன்பது தினங்கள் நவநாட்கள் இடம்பெற்றதைத் தொடர்ந்து இவ்விழா ஞாயிற்றுக்கிழமை மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை மற்றும் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு அன்ரன் றஞ்சித் ஆண்டகைகளின் கூட்டுத் திருப்பலியுடன் கொண்டாடப்பட்டது.

கடந்த இரு வருடங்கள் கொரோனா மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டால் அன்றைய விழாக்களுக்கு பக்தர்களின் வருகை வெகுவாக குறைந்திருந்தது.

ஆனால் இவ்வருடம் இவ்வாறான நிலை காணப்படாதமையாலும் இவ் தினங்களில் விடுமுறைகள் அதிகமாக காணப்பட்டமையாலும் இலங்கையின் நாலா பக்கங்களிலிருந்தும் மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்த்த நிலையிலேயே இவ்விழா இடம்பெற்றது.

பெருவிழா திருப்பலியைத் தொடர்ந்து மருதமடு அன்னையின் திருச்சுரூப பவனியும் துணை ஆயர் மேதகு அன்ரன் றஞ்சித் ஆண்டகையினால் திருச்சுரூப ஆசீரும் வழங்கப்பட்டது.

1924 ஆம் ஆண்டு அடி மாதம் 2 ஆம் திகதி மருதமடு அன்னைக்கு முடிசூட்டு விழா நிகழ்ந்து எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு இதே தினத்தில் யூபில்ணீ ஆண்டாக அமைவதால் மன்னார் ஆயர் 02) இவ்தினத்தை பிரகடனப்படுத்தி ஆலயத்துக்கு முன் கொடியேற்றப்பட்டு இவ்யூபிலி ஆண்டுவரையும் இவ்கொடி பறக்க விடப்பட்டுள்ளது.

அத்துடன் செபமாலை உருவத்தில் பலூன்கள் ஆகாயத்தில் ஆயர் அவர்களால் பறக்கவிடப்பட்டது.

அத்துடன் அடுத்த ஆண்டு யூபிலி வரை மன்னார் மறைமாவட்டம் பூராகவும் ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெறும் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

# கல்முனையில் 60 கோடையாளர்கள் கௌரவிப்பு.
## உலக சாதனை படைத்த கிரண்யாஶ்ரீயும் கௌரவிப்பு!






( வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை ஆதரவைத்தியசாலையில் 60 கொடையாளர்களை கௌரவித்த நிகழ்வு இடம் பெற்றது.

இந் நிகழ்வானது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. இரா. முரளீஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வின் போது வைத்தியசாலைக்கு நன்கொடைகள் வழங்கிய 60 கொடையாளர்கள் பாராட்டு நற்சான்றுகளும் நினைவு சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜெ மதன் வைத்திய நிபுணர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் வைத்தியசாலை குழுவினரும் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வின் போது அம்பாறை மாவட்டம், கல்முனை, துரைவந்திமேடு எனும் கிராமத்தைச் சேர்ந்த ஜனாசுகிர்தன் கிரண்யாஶ்ரீ எனும் நான்கு வயதுச்சிறுமி அவர்களும் கௌரவிக்கப்பட்டார்.

இவர் மாபெரும் இரண்டு உலக சாதனைகள் படைத்துள்ளார்.. இவர் தனது இரண்டு கைகளாலும் அ-நூ வரை குறுகிய நேரத்தில் எழுதி அவர் படைத்த அவரின் சாதனையை அவரே முறியடித்து 2 உலக சாதனைகளை படைத்துள்ளார்.

இவர் கல்முனை ஆதார வைத்திய சாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி ஜெயந்தினி ஜனா சுகிர்தன் புதல்வி என்பது குறிப்பிடத்தக்கது.




# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில்
## மனித உரிமைகள் குறுங்கால கற்கை நெறிகள்




மிக விரைவில் மூன்றாம் தொகுதி மாணவர்களுக்கான மனித உரிமைகள் குறுங்கால பாடநெறிக்கான சான்றிதழ் மற்றும் டிப்ளோமா கற்கை நெறிகள் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் தெரிவித்தார்.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மனித உரிமைகள் கற்கைநெறி மாணவர்களின் பிரியாவிடை நிகழ்வு தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் அரசியல் விஞ்ஞானத் துறையினால் நடாத்தப்பட்ட மனித உரிமைகள் குறுங்கால சான்றிதழ் பாடநெறி க்கான இரண்டாம் தொகுதி மாணவர்களின் இறுதிப் பரீட்சையும் பிரியாவிடை நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (02) தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மனித உரிமைகள் கற்கை நெறியின் மாணவன் முஸ்தபா முபாறக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகவும், விசேட அதிதிகளாக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி. எம்.எம். பாஸில் , பாடநெறியின் இணைப்பாளர் விரிவுரையாளர் ரி.எப். சஜீதா, உதவி விரிவுரையாளர்கள், மாணவ, மாணவிகள் என பலரும் கலந்து கொண்டதுடன் நிகழ்வில் கலந்து கொண்ட பல்கலைக்கழக உபவேந்தர், பீடாதிபதி, விரிவுரையாளர் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு நினைவு சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

# குடிநீருக்காக அல்லாடும் கல்லரிப்பு பழங்குடி மக்கள்!

## அரசியல்வாதிகள் அதிகாரிகள் கவனிப்பார்களா?





'நீர் இன்றி அமையாது இவ்வுலகு' என்று கூறுகின்றார் தெய்வப் புலவர் வள்ளுவர்.

ஆனால் இந்த நவீன யுகத்தில் நீர் இல்லாமல் ஒரு முழுக்கிராமமே தத்தளித்துக் கொண்டிருக்கின்றது என்றால் நம்ப முடியுமா?

ஆம், மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வரலாற்று பிரசித்தி பெற்ற முருகன் ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்திருக்கின்றது அந்த கிராமம்.

கல்லரிப்பு என்பது அக் கிராமத்தின் பெயர். அந்த கிராமத்தில் ஆக 41 குடும்பங்களைச் சேர்ந்த தமிழ் பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் கடந்த காலங்களிலே தமது குடிநீர் மற்றும் தேவைகளுக்காக ஆற்றிலும் ஓடையிலும் தங்கியிருந்தார்கள்.

அந்த மக்களிடம் குடிநீர் பிரச்சினை பற்றி கேட்ட போது அவர்கள் கூறியதாவது...

சுத்தமான நீர் எடுக்க வேண்டுமாக இருந்தால் சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் நடந்து அதனை பெற வேண்டிய தேவையுள்ளது.

நாளடைவில் பிரதேசசபையூடாக குடிநீர்வழங்கப்பட்டு வந்துள்ளது . அதுவும் சில நேரங்களில தாமதமாகிதான் கிடைக்கும்.

அவ் வேளைகளில் ஆற்றில் இருந்து நீரை பெறுவோம். எமது ஊரில் பாடசாலை இல்லை.

மாணவர்கள் சீருடைகளை இங்கு கழுவினால் பழுப்பு நிறத்தில் காணப்படும். அருகிலுள்ள பாடசாலைக்கு செல்லும் எமது மாணவர்களுக்கு அது சிரமம். ஆசிரியர்கள் சிலவேளைகளில் இந்த நிறம் பற்றி கேள்விகள் கேட்பதுண்டு.

இந் நிலையில் இங்கு ஒரு குடிநீர் திட்டம் ஒன்றை மேற்கொள்ள வெளிநாட்டு உதவியோடு அரச சார்பற்ற நிறுவனமொன்று முன்வந்தது.

Bright future international UK என்ற நிறுவனம் தான் இத் திட்டத்திற்கு நிதி உதவி வழங்கியது.

இந்த குடிநீர் திட்டம் 3132023 ல் ஆரம்பிக்கப்பட்டது.

ஆற்றில் இருந்து நீரை பெற்று சுத்திகரிப்புச் செய்து அதனை வழங்குவதற்காக மின்சார செலவுக்காக மாதம் 100 ரூபாய் வழங்குமாறு மக்களிடம் கோரப்பட்டது. மக்களும் மகிழ்ச்சியில் அந்த நூறு ரூபாய் வழங்கினார்கள்.

ஆனால் அந்த மகிழ்ச்சி ஒரே ஒரு மாதம் வரைதான் நீடித்தது.

ஒருமாதமே குடிநீர் கிடைத்தது. அதுவும் எதிர்பார்த்த சுத்தமான நீர் இல்லை.

அதனக்கூட ஏப்ரல் மாதம் மாத்திரமே அதனை வழங்கியிருந்தார்கள். அதன் பின்பு குடிநீர் வழங்கப்படவில்லை.

தற்போது இக் குடிநீர்த் திட்டமும் நிறுத்தப் பட்டு விட்டது. தற்போது நாங்கள் குடிநீருக்காக வெகு தூரம் செல்ல வேண்டிய அவசியம் உள்ளது.

இந் நிலையில் மக்கள் வெகுண்டெழுந்து அந்த குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவிய ஒப்பந்தக்காரரிடம் கேட்ட






பொழுது அதற்குரிய இரசாயன திரவம் ஒன்று வரும். அது வருகின்ற பொழுது குடிநீர் தருவோம் என்று கையை விரித்து விட்டார்.

அதனால் குடிநீருக்காக அல்லாட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. என்றார்.

தற்பொழுது அந்த மக்கள் குடிநீருக்காக மீண்டும் மீண்டும் தொலை தூரம் பயணிக்க வேண்டி இருக்கின்றது . இதனை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் கவனிக்க வேண்டும் என்று அந்த மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றார்கள்.

கவனிப்பார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்.

**வி.ரி.சகாதேவராஜா**
**காரைதீவு நிருபர்.**

---

# கந்தளாய் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் ஞானகுணாளன் போல் ரோஷான்

**(எப்.முபாரக் )**

வைத்தியர் ஞானகுணாளன் போல் ரொஷான், மருத்துவ நிர்வாக முதலாம் நிலை கலாநிதி பட்ட பயிற்சியினை (M.D. in Medical Administration Part 1) நிறைவு செய்து கந்தளாய் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் இதற்கு முன் மொறவெவ ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக கடமையாற்றினார்.

காட்டு யானைகளின் தாக்குதல்களினால் பின்தங்கிய நிலைமையிலிருந்த மொறவெவா வைத்தியசாலையை தனது வழிகாட்டலின் கீழ் திருகோணமலை மாவட்டத்தின் சிறந்த ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் என்ற ஸ்தானத்திற்கு கொண்டு வந்தார்.

இவர் மருத்துவ நிர்வாக முதுகலை மாணி பட்டப்பயிற்ச்சியின் (M.Sc. in Medical Administration) பின் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக கடமையாற்றியுள்ளார். அங்கு அவர் கடமையாற்றிய குறுகிய காலத்தினுள் பல துரித அபிவிருத்தி செயற்திட்டங்களைதனது வழிகாட்டலின் கீழ் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளார்.



இவர் வைத்திய இளமானி பட்டம் மற்றும் மருத்துவ நிர்வாக முதுகலை மாணி பட்டம் (M.Sc. in Medical Administration) என்பவற்றிற்கு மேலதிகமாக வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார சேவைகளில் நிபுணத்துவ வணிக முகாமைத்துவ முதுகலைமாணி பட்டம் (MBA in Hospital Health Services Management) (ஐக்கிய இராச்சியம்), சுகாதார தரநிலை மற்றும் நோயாளர் பாதுகாப்பு பட்டப்பின்படிப்பு டிப்ளோமா (PG Dip in Healthcare Quality Patient Safety) (கொழும்பு பல்கலைக் கழகம்), சுகாதார தகவல் தொழில்நுட்ப துணை நிபுணத்துவ பட்டம் (Specialisation in Healthcare IT Support) (ஐக்கிய அமெரிக்கா), சுகாதாரத்துறைக்கான செயற்கை நுண்ணறிவுகளின் நெறிமுறைகள் மற்றும் ஆளுகை தொடர்பான பட்டம் (Ethics and Governance of Artificial Intelligence for Health) (உலக சுகாதார ஸ்தாபனம்) போன்றவற்றை நிறைவு செய்ததுடன் தற்போது சுகாதார அபிவிருத்தி பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பயிற்ச்சியினையும் (PG Dip in Health Development) (கொழும்பு பல்கலைக்கழகம்) தொடர்கின்றார்.

இவரது பெற்றோர்கள் (வைத்திய கலாநிதி திரு மற்றும் திருமதி ஞானகுணாளன்) கிழக்கு மாகாணத்தின் சிரேஷ்ட மருத்துவ நிர்வாகிகளாக திருகோணமலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர், திருகோணமலை பிராந்திய சுகாதார பணிப்பாளர் மற்றும் கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் போன்ற பதவிகளில் கடமையாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வைத்தியர் ஞானகுணாளன் போல் ரொஷான், திருகோணமலை இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்து கல்லூரியின் பழைய மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

---

# பிரமியின் 'கனதி' சிறுகதை நூல் திருகோணமலையில் வெளியீடு..!



**(அ . அச்சுதன்)**

அன்பின் பாதையின் எண்ணம் போல் வாழ்க்கைக் கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் எழுத்தாளர் சேனையூர் பிரம்மியா சண்முகராஜாவின் கனதி சிறுகதை நூல் வெளியீட்டு விழா ,இன்று திங்கட் கிழமை காலை 10.00 மணிக்கு திருகோணமலை நகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் எண்ணம் போல் வாழ்க்கை அமைப்பின் தலைவர் கனக.தீபகாந்தன் தலைமையில் இடம் பெற்றது.

இன் நிகழ்வின் பிரதம விருந்தினராக திருகோணாமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சூ. பார்த்திபன் கலந்து சிறப்பித்தார்

நூல் வெளியீட்டினை கவிஞர் ஷெல்லிதாசனும் பிரதம விருந்தினரும் இணைத்து இளைஞர் சேவை அதிகார் அலாவுதீன் பாபுக்கு வழங்கி வெளியீட்டு வைத்தனர் .

சிறப்பு பிரதியை நூலாசிரியரின் தந்தைக்கு வழங்கப்பட்டது அருகில் நூலாசிரியர் நிற்பதையும் காணலாம் .

எழுதத் தூண்டும் எண்ணங்கள் : 05

# போலியானவற்றையும் மூட நம்பிக்கைகளையும் விலக்குவோம்

*விவேகத்துடன் செயற்பட்டு*
*வாழ்வில் எதிர் கொளளும்*
*போலிகள் மூட நம்பிக்கைகளைப்*
*பக்குவமாய்க் களைந்திடுவோம்*



சமய நம்பிக்கைகள், மரபுகள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள் ஆகியன ஒருவர் தமது வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்களாகும். இவற்றுக்கூடாக மனிதனுக்குத் தேவையான ஒழுக்க, விழுமியங்கள் கட்டி எழுப்பப்படுகின்றன. இவை மக்கள் மத்தியில் காலம் காலமாகப் பின்பற்றப்பட்டும் அடுத்த தலைமுறையினருக்குக் கடத்தப்பட்டும் வருகின்றன. அவற்றுள் சிலவற்றை ஏன், எதற்கு எனத் தெரியாமலே பின்பற்றி வருகின்றனர். அவற்றுள் பல போலிகளும் மூட நம்பிக்கைகளும் உள்ளன. அவரும் செய்கிறார் நானும் செய்கிறேன். அவரும் போகிறார் நானும் போகிறேன் எனப் பலர் உண்மையை உணர்ந்து கொள்ளாமல் போல, ஒப்ப மனம் போன போக்கில் வாழ்க்கையை நடாத்துகின்றனர். இன்னும் சிலர் விதியின்மீது பழியைப் போட்டுச் செல்கின்றனர். மெஞ்ஞான வாழ்க்கைக்குள்ளே விஞ்ஞானமும் பகுத்தறிவும் கலந்திருக்கிறது என்பதைப் பலர் மறந்த விடுகின்றனர். மனிதனுக்கு ஆறாவது அறிவாகிய பகுத்தறிவை உண்மையை உணர்ந்து வாழ்க்கையைத் தூய்மைப்படுத்துவதற்காகவே இறைவன் கொடுத்திருக்கிறான். ஆனாம், நாம் உண்மைஎது, போலி எது என்பதை உணர்ந்து கொள்ளாமல் வாழ்க்கையை வாழ்ந்து முடிக்கிறோம்.

புனிதமான, பெறுமதியான வாழ்க்கையை வாழ்வாங்கு வாழாமல் நம் முன்னோர் வாழ்ந்து காட்டிய நல்ல பாதையை மறந்து பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மாயமான வாழ்க்கையிலும் இந்த உலகத்திலும் நாம் வாழ்ந்தோம் என்ற சில சுவடுகளை விட்டுச் செல்ல வேண்டும். நமது வாழ்க்கை கல்லறையிலும் வாழும் சரித்திரமாக அமைய வேண்டும். 'நிரந்தரமானவன் நான் அழிவதில்லை. எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை என்ற கவிஞர் கண்ணதாசனின் பாடலடிக்கு உறுதி சேர்ப்பது போல் வாழ்க்கையை வாழ்ந்து மறைய வேண்டும். 'வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும், வாசல் தோறும் வேதனை இருக்கும், வந்த துன்பம் எதுவென்றாலும் வாடி நின்றால் ஓடுவதில்லை' என்ற கவிஞரின் பாடலடியும் நிமிர்ந்து, துணிந்து சென்று உறுதியோடு வாழ்க்கையை வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற உண்மையை உணர்த்தி நிற்கின்றது.

துன்பம், துயரம், கஷ்டம், நஷ்டம் இல்லாதது வாழ்கை அல்ல 'நீ எத்தனை தடவை விழுந்தாலும் அத்தனை தடவையும் பிறரின் உதவியை எதிர்பார்க்காது நீயாகவே எழுந்திருக்கக் கற்றுக்கொள். அப்போதுதான் நீ உரிய இலக்கை அடைவாய். இதிலிருந்து பின்வாங்கினால் வாழ்க்கையில் தோல்வியடைவாய். இதற்குள் பலவீனமும் மூடநம்பிக்கையும் கலந்திருந்தால் வெற்றி என்பதே வாழ்வில் கிடையாது போய்விடும்' இதுதான் உண்மை என்பதை மறந்து விடாதீர்கள்.

நமது வாழ்க்கையில் பூசை, புனஸ்காரங்கள், கிரியைகள், சமய, சம்பிரதாயங்களைக் கடைப்பிடித்து வருகிறோம. இவற்றுக்குள்ளே பல மூடநம்பிக்கைகளும் கலந்திருக்கின்றன. ஒருவரின் பிறந்த திகதி, நேரம், நச்சத்திரம், கிரக நிலை என்பன அவரின் வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றன. இங்கு இராசி, நச்சத்திரங்கள் இருந்த இடத்தில் இருக்க கிரகங்கள் மட்டும் சூரிய மண்டலத்தின் தமது சுற்றுகை, புவிச்சுழர்ச்சி, சுற்றுகை என்பவற்றுக்கு ஏற்ப நகர்ந்து கொண்டிருக்கின்றன. கிரக மாற்றங்களின் அடிப்படையில் நமக்கு நற்பலன், தீய பலன்கள் கிடைக்கின்றன. அதேபோல் நாம் பிறந்த திகதியும், நச்சத்திரம், இராசி ஆகியன மாறாதது. அதிலும் பிறந்த திகதியும் நேரமும் முக்கியமானது. இவற்றைக் கவனத்தில் கொண்டே கருமங்களை முன்னெடுக்க வேண்டும். காலம், நேரம் என்பவற்றைச் சரியான முறையில் கணிப்பிட்டுச்சாதக நிலையில் காரியங்களில் விடா முயற்சியோடு ஈடுபட்டால் வெற்றி நமதாகும். நம்மிடம் இருக்கும் வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கங்கள் இரண்டும் கிரக மாற்றங்களையும் சுப நேரங்களையும் வேறு வேறு நேரத்தில், வேறு வேறு தினத்தில் கிரகங்கள் மாறுவதாகக் கணிப்பிட்டுக் கூறுகின்றன. நமது இரு பஞ்சாங்கங்களும் கணிப்பீட்டு நீதியாகவே மாற்றங்களை உறுதி செய்கின்றன. விஞ்ஞான ரீதியாக உறுதி செய்யப்படாமையினால் கிரக மாற்றங்களில் இத்தகைய தவறுகள் ஏற்படுகின்றன. இத்தவறுகள் காரணமாகச் சில சமயங்களில் சுப நேரத்தைக் கணிப்பதில் பல சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். புவிச் சுழற்சிக்கும் சுற்றுகைக்கும் ஏற்பவும், கிரகங்கள் சூரிய மண்டலத்தில் சூரியனைச் சுற்றி நீள் வட்டப் பாதையில் வலம் வருவதனாலும் ஒவ்வொரு கிரக மாற்றத்துக்குரிய காலங்களும் அறிவியல் மற்றும் விஞ்ஞான ரீதியாகக் கணிப்பிடப்பட்டிருக்கின்றன. அந்தக் காலக் கணிபீட்டின் அடிப்படையில் கிரக மாற்றங்கள் நிகழ்கின்றன. கிரக மாற்றம் ஒவ்வொரு கிரகத்துக்குமுரிய சுற்றுகைக் காலம் முடிந்து தான் இருக்கும் இராசியில் இருந்து அடுத்த இராசிக்கு மாறுகின்றன. இந்த மாற்றம் ஒரே நாளில் ஒரே நெரத்தில் மாத்திரம் நிகழலாமே தவிர வேறுபட்ட தினங்களில், வேறுபட்ட நேரத்தில் மாற்றம் ஏற்ப முடியாது என்பதைக் கலனத்தில் கொள்ள வேண்டும்.

ஒருவர் பிறக்கின்றபோது குறித்த தினத்தில் குறித்த நேரத்தில் ஒரு நச்சத்திரத்தில் பிறந்தோரை லக்கினத்தில் நின்று கொண்டு, அவரின் ஆட்சி வீட்டுக்குரிய கிரகம் ஒன்று ஏனைய கிரகங்களைப் பார்க்கும் பார்வையுக் கொண்டே கிரகசார பலன்கள் தீர்மானிக்கப்படுகின்றன. இதன்படி நட்பு, ஆட்சி, பகை, நீசம் ஆகியன குறிப்பிட்ட நச்சத்திரத்தில் குறித்த பாதத்தில் பிந்தோருக்கு கிரக நிலை அமைந்திருக்கும். இதை வைத்துக் கொண்டே ஒவ்வொரு கிரகங்களும் இராசிக்கு இடம் மாறும்போது அவரவர்களின் இராசி பலன்கள் தீர்மானிக்கப்படுகின்றன. உதாரணமாக சனி பகவானின் ஆட்சி வீடாகிய மகர இராசிக்கு வரும்போது, அதில் இருந்து அடுத்த இராசிக்கு இடம் மாறும்போது அந்த இராசியில் பிறந்தோருக்கு ஏழரைச்சனி தோசம் (இரண்டரை வருடங்களுக்கு) கடைக் கூறாக இருக்கும். இவ்வாறு கிரகங்கள் இராசிகளுக்கு இடம் பெயரும்போது நற்பலன்களையும் தோசங்களையும் கொடுக்கின்றன. இதை வைத்துக் கொண்டு நமது பலவீனத்ததையும் மூட நம்பிக்கையையும் மூலதனமாக்கிப் பலர் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றனர்.

கிரகங்கள் மாறும்போது குறித்த நச்சத்திரத்தில் பிறந்தோருக்குப் பிறந்த திகதிக்குரிய செயற்பாடுகள் நடந்து கொண்டே இருக்கும். இதனை தோச நிவர்த்திக் கிரியைகள், அர்ச்சனை போன்றவற்றால் தோசங்களைப் போக்கிக் கொள்ளலாம் என நினைப்பதே மூடநம்பிக்கையாகும். சனி தோசம் பிள்ளையாரைத்



**சோலையூர்க் குருபரன்**

தவிர ஏனைய தெய்வங்கள் எல்லோரையும் பீடித்து அவர்களை வருத்தி இருககின்றன. 'எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்' னெ்பது கீதாசாரம். கிருஷ்ண பகவான் கூறியது. மனிதரால் கூறப்படவில்லை. இறைவன் கிரக மாற்றங்களின் மூலம் மனிதர்களுக்குத் துன்பத்தைக் கொடுத்து அதிலிருந்து பிறரின் உதவிய்ன்றி எவ்வாறு மீண்டெழுகிறான் என்பதைப் பரீட்சித்துப் பார்க்கிறான். கருணைக் கடலாகிய இறைவன் நமக்கு உயிரையும் உடலையும் தந்து, இந்த உலகத்தையும் நமக்காகத் தந்திருக்கிறான். இத்தகைய இறைவனுக்கு நன்றி செலுத்துவதை விடுத்து அதைத்தா இதைத்தா எனக் கையேந்தி நிற்கின்றோம். கொடுக்கல் வாங்கல் செய்பவர் இறைவனல்ல. அவர் கருணைக் கடலாகவும் அடியார்க்கு எழியோனாகவும் இருக்கின்றார்.



இறைவன் 'ஆடை, அணிகள் ஆடம்பரங்களை விரும்புவதில்லை. நமது குறைகள், துன்ப, துயரங்களைக் கூறுவதற்காக ஆடை, அணிகள், ஆடம்பரங்களுடன் கோயிலுக்குச் செல்கின்றோம். கோயிலை வருமானம் உழைக்கும் நிறுவனங்களாகக் குருக்கள்மாரும் ஆலய நிர்வாகிகளும் மாற்றிவிட்டார்கள. அடியார்கள் கோயிலுக்குக் கொண்டு செல்லும் பூசைப்பெட்டி, நேர்த்திக்கடன், பால்குட பவனி என்பவற்நுக்காக இரசிது கொடுத்துப் பணம் அறவிடுகின்றார்கள். மேடைகளில் பொன்னடை போர்த்துவது போல் பாற்குட பவனியும் வாடிக்கையாகிவிட்டது. ஆலயங்களில் பணம் வசூலிப்பதற்கு அந்தணர்கள் உருவாக்கிய பூசைகள், புனஸ்காரங்கள், கிரியைகள், விழாக்கள் ஆகியன நமது நம்பிக்கை என்ற பலவீனத்தைப் பயன்படுத்தி நம்மிடம் இருந்து பணத்தை அறவிடுகின்றனர். பல ஆலயங்களில் தெய்வங்கள் ஒலிபெருக்கி மூலம் விற்கப்படுகின்றன. ஏன், எதற்கு எனக் கேட்டால் இறைவன் திருப்பணி என்பார்கள். கோயில் புனருத்தாரணம், கட்டுமானப் பணிக்குத் தேவை என்பார்கள். விரதம் பிடிப்பதற்குக் காசி, காப்புக் கட்டுவதற்குக் காசி, அலகு போடுவதற்குக் காசி, காவடி எடுப்பதற்குக் காசி, பிரதட்டினை செய்வதற்குக் காசி, பல ஆலயங்களில் போடப்படாத அர்ச்சனைக்குக் காசி எனப் பணம் உழைக்கும் நிறுவனங்களாக கோயில்கள் மாறிவிட்டன. இதனை ஏனைய சமயத்தவரின் வணக்கத் தலங்களில் காணமுடியாது.

நாட்டில் வறுமை தலைவிரித்தாடும் நிலையிலும் ஆலங்களில் ஆடம்பரங்களுக்கு மாத்திரம் குறையவில்லை. அப்பியாசக் கொப்பி, பென்சில், பென், அழி இறப்பர், சூ, சொகஸ், உடுப்புத் துவைக்கச் சவர்க்காரம், தலைமுடி வெட்டப் பணம் இல்லாமல் 30 வீதம் வரையான பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாமல் இருக்கின்றனர். இந்த ஆடம்பரச் செலவுகளில் குறிப்பிட்ட பணத்தைக் கொடுத்து அல்லது பொருட்களை வழற்கிப் பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்பி வைக்கலாம். 'மக்கள் சேவைதான் மகேசன் சேவை' என்பதனை மறந்து போலியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

'யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார்தான் வருவார்' என்பது சிவஞான சித்தியார். நாம் எந்தத் தெங்வத்தை வழிபட்டாலும் அங்கு சிவபெருமான் வந்து அருள் பாலிப்பார் என்பது இதன் கருத்தாகும். அதை விடுத்து ஊருக்குப் பல கோயில்களைக் கடடி மக்களுக்குச் சுமையைக் கூட்டி இருக்கின்றனர். மக்களின் வருமானம் குறைந்து வறுமையில் வாடுகின்ற போது கோயில் கட்டுதல், கும்பாபிசேகம், சங்காபிசேகம், திருவிழாக்கள், பிரதிஸ்டைகள், விசேட பூசைகள், விரதங்கள் எனச் செலவுகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. மக்களின் சில விதங்களும் செயற்பாடுகளும் கேலிக் கூத்தாகிவிட்டன. கேதார கௌரி விரதம், திருவெம்பாவை விரதம் ஆகியன திருமண வயதை எய்திய பெண்கள் தனக்கு நலல ஆடவன் ஒருவன் கணவனாக அமைய வேண்டும் என்பதற்காகவே இவ்விரதங்கள் பிடிக்கப்படுகின்றன. ஆனால் இவ்விரதங்களை ஆடவர்கள, திருமணமாகிய பெண்கள், முதியவர்கள் எனப் பலரும் அனுட்டிக்கின்றனர்.

மாணிக்கவாசக சுவாமிகள் அதிகாலையில் எழுந்து தன்னைப் பெண்ணாகப் பாவனை செய்து தினமும் திருவண்ணாமலைத் தீர்தத்தில் தீர்த்தமாடித் திருவெம்பாவை பாடி விரதத்தை அனுட்டித்தார் என்பதை அறிகின்றோம். அவர் தன்னிலையில் இருந்து கொண்டு வழிபடவில்லையே. தன்னையும் ஒரு பெண்ணாகப் பாவனை செய்து, நீராடி விரதத்தைஅனுட்டித்தார். நமது இந்து மதத்தில் ஒவ்வொரு தேவைக்கும் ஒவ்வொரு தெய்வத்தை நினைத்து விரதமிருக்கலாம் எனக் கூறப்பட்டிருக்கிறது. அதைவிடுத்து எல்லோரும் எல்லாத் தெய்வங்களையும் நினைத்த விரதமிருக்கிறோம். அதேபோல் கருப்பையில் கருவொன்று உருவாக வேண்டும் என்பதற்காகத் திருமணமாகிய பெண்கள் மடிப்பிச்சை எடுத்தார்கள் என முன்னைய சம்பிரதாயம் பற்றி அறிகிறோம. பின்வந்தவர்கள் நடைமுறையை மாற்றிச் சிறு பிள்ளைகள், வயது முதிர்ந்த பெண்கள் ஆகியோரும் மடிப்பிச்சை எடுக்கின்றனர்.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிர்ணயிக்கப்படுகின்றன. 'தாரமும் கல்வியும் தலைவிதிபடபடி' என்பார்கள். சிலருக்கு அவ்வாறு அமையாது வற்புறுத்தலின் பேரில் அமைகின்றன. நிர்ணயிக்கப்பட்ட வாழ்க்கை அமைவதற்கு எடுத்தோம், கவிழ்த்தோம் என்றில்லாமல் பல வருடம் வாழப் போகின்ற வாழ்க்கையை நின்று, நிதானித்துத் திட்டமிட்டுப் பெரியோர் ஆசீர்வாதத்துடன் சிறப்பாகச் சேய்து முடித்தல் வேண்டும். பெற்றோரும், குறிப்பிட்டவர்களும் ஆத்திரப்பட்டு அவசரப்பட்டுப் பட்டம், பதவி, கௌரவம் என்பன பாரத்துச் சீதனம் கொடுத்துப் பெரும் செலவு செய்து திருமணத்தைச் செய்து முடிக்கினறனர். விதிக்கப்பட்டதுதான் திருமண வாழ்க்கை என்பதை மறந்து பலர் படுகுழியில் வீழ்ந்திருப்பதைப் பார்த்திருக்கிறோம். தாரமும் கல்வியும் தலைவிதிப்படி அல்லாமல் வேறு எந்த வழியிலும் அமையாது என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். அவ்வாறு அரமைந்தால் அது நிலைத்திருக்காது. அவ்வாறு அமைந்த வீடுகளில் தினமும் போராட்டமே நடைபெறும். 'இன்னார்க்கு இன்னாரென்று எமுதி வைத்தானே தேவன் அன்று' என்பதற்கிணங்க பொறுமைகாத்து திருமணத்தைச் செய்து வைக்க வேண்டும்.

6, 15, 24 ஆந் திகதிகளில் பிறந்தோர், மகர இராசி, செவ்வாய், சனி தோசமுள்ளோர் ஆகியோருக்குத் திருமண வாழ்க்கையில் சில சிக்கல்கள் இருக்கின்றன என்பதனால் மிகச் சரியாகப் பொருத்தம் பார்த்துத் திருமணம் செய்யப்படாவிட்டால் அத்திருமணம் பெரும்பாலும் தோல்வியிலேயே முடியும். அவர்களுக்குப் பொருத்தம் பார்க்கும் போது ஜாதகக் குறிப்புகள். பெண்ணின் ருது சாத்திரக் குறிப்புகள், எண்சாத்திரம், இரேகை சாத்திரம் ஆகியவற்றைப் பார்த்துத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் பிறந்த குறிப்பு, எண் சாத்திரம் ஆகியவற்றில் கூறப்படாத சில விடயங்கள் உடல் கூற்று ரீதியாக அமைந்த கை இரேகைகளில் காணப்படலாம். அவற்றையும் பார்த்துத் தெரிந்து கொண்டு நிச்சயம் செய்வது பொருத்தமானதாக அமையும். ஒருவரின் திருமணத்துக்குக் காரணமாக இருப்பது செவ்வாய்.

மிக மிகச் சரியாகக் கணிப்பிட்டு எழுதப்பட்ட ஜாதகக் குறிப்பின்படி செவ்வாயின் கிரகசார பலன் ஆட்சி, நட்பாக இருந்தால் விரைவில் அவருக்குத் திருமணம் நடக்கும். நீசமாக இருந்தால் தாமதமாகும். பகையாக இருந்தால் செவ்வாய் தோசமாகும். இத்தகையவர் உடல் வெப்பம் கூடியவராக இருப்பார். செவ்வாய் தோசம் உள்ள ஒருவருக்குத் தோசமில்லாத ஒருவரைத் திருமணம் செய்து கொடுத்தால் தோசமுள்ளவரின் வெப்பம் தோசமில்லாதவரைத் தாக்கிக் கொன்று விடும். ஆகவே, செவ்வாய் தோசம் உள்ளவருக்குத் அத்தோசம் உள்ள ஒருவரைத் திருமணம் செய்து கொடுப்பதே சிறந்தது. இவர்களுக்குப் பிள்ளைப் பாக்கியத்தக்கான வாய்ப்பும் மிகக் குறைவாகவே இருக்கும். இதனை விடுத்துத் தோச நிவர்த்தி செய்து மாற்றம் ஏற்படப் போவதில்லை. நமது பலவீனத்தை அறிந்து சிலர் பணம் சம்பாதிக்க முயற்சிக்கலாம். இவ்வாறுதான் ஒவ்வொரு இராசிக்கும் பிறந்த எண்களுக்கும் சில பரிகாரங்கள் இருக்கின்றன.

புத்தி சாதுரியமாக அவற்றைக் கணக்கில் எடுக்காது மனம் போன போக்கில் அவசரப்பட்டுத் திருமணம் என்னும் ஆயிரம் காலத்துப் பயிரை கேள்விக்குறி ஆக்கி விடக் கூடாது என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். எண் சாத்திரப்படி ஒரே இலக்கத்தில் பிறந்தவர்களை முடிந்தவரை திருமணம் செய்து வைப்பதைத் தவர்த்துக் கொள்ள வேண்டும். இதனைப் புத்திசாதுரியமாக அணுகாது திருமணம் செய்து வைத்த பின்னர் வரும் பிரச்சினைகள், துன்பங்கள், துயரங்கள், இழப்புக்கள் என்பவற்றைச் சமாளிக்க முடியாமல் சாத்திரிமார், கோயில் என்று அலைந்து திரிவார்கள். அதனால் ஆகப்போது ஒன்றுமில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இவை நமது பிறப்போடு சம்பந்தப்பட்டு விதிக்கப்பட்டவை. அதனால் ஒவ்வொரு கருமங்களையும் வருமுன் காப்போம் என்றவாறு நமது செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்துவதே சிறந்தது. இதை விடுத்துப் பில்லி, சூனியம், கழிப்பு, பேய், விசாசு, அந்தப் பார்வை, இந்தப் பார்வை எனப் பணத்தைக் கொட்டி அலைந்து திரிவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இந்த மூட நம்பிக்கைகளால் பணம், சொத்து இழப்பு மாத்திரமின்றிப் பல உயிர்களும் பறிபோய் இருக்கின்றன.

ஆகவே, நமது வாழ்க்கை நம் கையில்தான் இருக்கின்றன. நமது வாழக்கையை ஆற, அமரச் சிந்தித்து நாமே தீர்மானிக்க வேண்டும். மூன்றாம் நபர் நமது வாழ்க்கையைத் தீர்மானித்தால் நமது வாழ்க்கை கேள்விக்குறி ஆகிவிடும். நமது குடும்பத்தார், நெருங்கிய உறவினர்களோடு கலந்துரையாடித் தக்கபடி தீர்மானித்துக் கொள்வதே மேலானது. இதனையெ நமது முன்னோர் 'பதறாத காரியம் சிதறாது' எனக் கூறி வைத்தனர்.

*அவரவர் தமக்குரிய ஆயுளும்*
*கல்வியும், தொழிலும் வாழ்க்கையும்*
*எழில், செல்வம், மரணம் இவை ஏழும்*
*தவமுடைப் பிரம்மதேவன் தமது கைப்பட்டுத்*
*தொடங்கு முன்னே*
*சிவன் அருளினாலே கருவிலே*
*உருவானது என்பது திருவாக்கு.*

திருவாக்குத் தொடரும்...

# ஈழத்து ஹைக்கூவின் உள்ளடக்கமும் ஐங்கரன் (சார்ள்ஸ்) ஹைக்கூகளும்



**(ஈழத்து ஹைக்கூவின் உள்ளடக்கமும் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் (சார்ள்ஸ்) ஹைக்கூ கவிதைகளைப் பற்றி கவிஞர் மேமன் கவி 1990 மேயில் எழுதிய ஆக்கம்)**

புதிய இலக்கிய உருவங்களினால் நவீன தமிழ் இலக்கியம் அவ்வப்பொழுது அடைந்து வரும் செழுமையின் மூலம் புதிய அனுபவ வீச்சுகளை நாம் தரிசனமாக்கிக் கொள்கிறோம்.

அவ்வகையில் 60களில் ஆரம்பிக்கப்பட்ட 'நடை' எனும் தமிழகத்தின் சிறு சஞ்சிகையிலும், 70களுக்குப்பின் 'வானம் பாடி' குழுவில் தோன்றிய கவிஞர்களாலும் ஜப்பானிய கவிதை வடிவமான ஹைக்கூ தமிழுக்கு அறிமுகமாகிய பொழுது மேற்கூறிய புதிய அனுபவங்கள் நமக்குத் தரிசனமாகின.




ஆனாலும், இற்றைக்கு அரை நூற்றாண்டுக்கு முன்னதாகவே நவீன தமிழ்க் கவிதை பாரதியின் பிதா பத்திரிக்கையில் ஜப்பானிய கவிதை வடிவமான ஹைக்கூவை பற்றிய செய்திகள் முன் வைக்கப்பட்டுள்ளன என்பது நாம் அறிந்ததே.

## ஜப்பானிய கவிதை வடிவம்:

ஹைக்கூ எனும் ஜப்பானிய கவிதை வடிவம் தமிழ் இலக்கிய உலகில் அறிமுகப்படுத்தப்பட்ட மொழி பெயர்க்கப்பட்ட ஜப்பானிய ஹைக்கூ கவிதைகளின் முன்னோடிகளான இஸ்ஸா - பாஷோ - ஷிகி போன்ற கவிஞர்களின் கவிதைகளின் உள்ளடக்கங்கள் ஜென்மத தத்துவத்தின் அடிப்படையில் தான் அமைந்தன.

அத்தகைய ஹைக்கூகளை படிக்க கிடைத்த தமிழக கவிஞர்கள், தாம் படைத்த பெரும்பான்மையான ஹைக்கூகலில் இயற்கையையும் காதலையும் மிக குறைந்த நிலையில் சமூக விமர்சனத்தையும் கொண்டிருந்தனர். ஒரு வகையில் ஜப்பானிய ஹைக்கூ கவிஞனின் அனுபவத்தை இரவல் வாங்கியுள்ளனரோ என்ற ஐயப்பாட்டினை இடைக்கிடையே அக் கவிதைகள் நமக்கு ஏற்படுத்தின.

இப்போக்கு புதுக்கவிதையின் ஆரம்ப கட்டத்தில், 'எழுத்து'காலத்து கவிஞர்கள், மேற்கத்திய கவிஞர்களின் உள்ளடக்கத்தின் படிமத்தை தங்கள் புதிய கவிதைகளுக்கு பயன்படுத்தினர். ஒரு புதிய இலக்கியவாதி ஒரு மொழியின் இலக்கியத்தில் கையாளப்படும்போது, அது மொழி சார்ந்த சமூகத்தின் அனுபவ நிலைமைகளை (அந்நிய மொழியிலிருந்து அல்லது தன்னால்) வெளிப்படுத்த வேண்டும்.

அப்போதுதான் அந்த மொழியின் இலக்கியம் புதிய இலக்கிய வடிவத்தின் வருகையால் வளம் பெறும். எடுத்துக்காட்டாக, ஆங்கிலக் கவிதை உலகில் பரிச்சயமான 'லிமெரிக்ஸ்' வகையை 'குறும்பா' என்று நம் நாட்டுத் தமிழ்க் கவிஞர் மகாகவி உருவாக்கியபோது, ஈழத்து தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளைக் கலந்து, சமூகப் புனைவுகளை விளக்கினார். அவரது குரும்பா ஈழத்தில் ஹைக்கூ முயற்சிகள் பரவலாக இல்லாத போது வானம்பாடி குழுவினரின் ஹைக்கூ முயற்சிகள் பற்றிய பரிச்சயமே ஈழத்து நவீன தமிழ்க் கவிஞர்களிடையே ஹைக்கூ பற்றிய சிந்தனையை பரவலாக்கியது என்பதை மறந்துவிட முடியாது.

## முரளிதனின் கூடைக்குள் தேசம்:

உதாரணமாக, ஈழத்தின் முதல் ஹைக்கூ தொகுதியாக அடையாளப்படுத்தக் கூடிய சு.முரளிதனின் கூடைக்குள் தேசம் என்ற கவிதைத் தொகுப்பில் மலையக மக்களின் வாழ்க்கைப் பிரச்சனைகள் மட்டுமின்றி, தேசியவாத ஓட்டத்தோடும் பல ஹைக்கூக்கள் தொடர்புடைய ஹைக்கூக்கள் எழுதப்பட்டுள்ளன.

முரளிதரனின் தொகுப்பு மூலம் இன்னொரு சிறப்பம்சத்தைக் காணும் தாகம் இருக்கிறது. அதாவது தமிழகத்தில் வெளியாகும் அனைத்து ஹைக்கூ தொகுதிகளின்தலைப்புகளும் அழகியல் படிமங்களாகவும், ஈழத்தில் வெளியான முதல் ஹைக்கூ தொகுதியின் தலைப்பும் சமூகக் கருப்பொருளைக் கொண்டிருப்பதைக் காணலாம்.




தமிழ் இலக்கியத் துறையில் உள்ள அனைத்து இலக்கிய வடிவங்களுக்கிடையில், பரந்த மற்றும் ஆழமான சமூகக் கருப்பொருளைக் கொண்டு வருவதில் ஈழத் தமிழ் இலக்கியப் படைப்புகள் முன்னணியில் நிற்கின்றன என்பதை இது காட்டுகிறது.

ஈழத்தமிழ் இலக்கிய தளத்தில் இவ்வாறான நிகழ்வுகளின் அடிப்படையில் எழுதப்பட்ட ஹைக்கூக்களின் உள்ளடக்கத்தின் வளர்ச்சி நண்பர் ஐங்கரனின் 'உனக்குள்ளேயே உள்ளிருப்பு' என்ற தொகுதியின் ஊடாக வேறொரு பரிமாணத்தை அடைகிறது.

அதாவது 80க்குப் பிறகு ஈழத் தமிழ்க் கவிதையின் தேசிய சுதந்திரப் போராட்டத்தின் புதிய பரிமாணப் பண்பை - ஈழத்து ஹைக்கூகளிலும் 80களுக்குப் பிறகு ஈழத்துச் சிறு இதழ்களில் எழுதப்பட்ட ஹைக்கூகளிலும் காண முடிந்தது. இத்தகைய ஹைக்கூக்கள் தொகுப்புகளில் வெளிவராத சூழ்நிலையில் நண்பர் ஐங்கரன் இந்தத் தொகுதி மேற்கண்ட பண்புடன் தமிழில் முதல் தொகுதி என்ற முத்திரையைப் பெறுகிறது.


பத்தொன்பது வயதைத் தாண்டிய இந்த இளைய படைப்பாளி சார்ள்ஸ் (விக்னேஸ்வரா ஐங்கரன்) ஈழத்து இலக்கிய உலகில் குறுகிய காலத்துக்குள் அறிமுகமானவர். இளைய படைப்பாளிகளில் பலரதும் கவனத்தை ஈர்ந்தவர் இந்த இளைஞர். இவரது ஏழாவது கவிதைத் தொகுதியாக "கல்லறைக்குள் கதிரவன்" வெளியாகின்றது.

சார்ள்ஸ் ஒன்பது கவிதைத் தொகுதிகளை படைத்துள்ளார் இது வரை ஏழு தொகுதிகள் நூலாக்கம் பெற்றுள்ளன.

இவற்றில் மூன்று தொகுதிகள் ஹைக்கூ கவிதைகளாகும். அணையாத அறிவாலயம், விடியலின் கானம், இன்னமும் இருட்டினில், உறக்கம் தேடும் உலகிற்காய் புதுக்கவிதை தொகுதிகளும்; உனக்குள்ளேயே உள்ளிருப்பு, இழப்புக்களையும் இழப்போம், கல்லறைக்குள் கதிரவன் ஆகிய ஹைக்கூ கவிதைத் தொகுதிகளையும் படைத்துள்ளார். கல்லறைப் பூக்கள், இன்னொரு விழிப்பு ஆகியன நூலுருப்பெறாத கவிதைத் தொகுதிகள் ஆகும்-அத்துடன் "கல்லறை மேலான காற்று" கவிதைத் தொகுதியை தொகுத்தளித்தவரும் இவரே. இளைய வயதிலேயே "சிறுவர் இலக்கியம்" பற்றிய நீண்ட தொகுப்பாய்வினையும் சார்ள்ஸ் மேற்கொண்டுள்ளார். சிறுவர் பத்திரிகைகள், சிறுவர் இலக்கிய நூல்கள் ஈழத்துச் சிறுவர் இலக்கியம், எனும் மூன்று இயல்களாக இருபத்திநான்கு தொடர் கட்டுரைகள் தினகரன் பத்திரிகையில் வெளிவந்துள்ளன.


ஈழத்து இளைய இலக்கியப் படைப்பாளிகளில் சிறப்பான கவனத்தை ஈர்ப்பவராக சார்ள்ஸ் விளங்குகின்றார்.

வசந்தம் வெளியீட்டகம்

## ஈழத்தின் சிறப்பியல்பு கொண்ட ஹைக்கூக்கள்:

நண்பர் ஐங்கரனின் இத்தொகுதியில் ஈழத்தின் சிறப்பியல்பு கொண்ட ஹைக்கூக்கள் மட்டுமல்ல, விடுதலைப் போராட்டச் சூழலில் வாழும் ஒரு நவீன கவிஞருக்கு இருக்க வேண்டிய சர்வதேசக் கண்ணோட்டமும், அனுபவங்களும் ஹைக்கூக்களாக உருவாக்கப்பட்டுள்ளன.

வார்த்தைகளின் கண்டிப்பில் கவிதையாகக் கூடிய ஹைக்கூவின் தரத்தை நண்பர் ஐங்கரன் நன்கு புரிந்துகொண்டார் போலிருக்கிறது. வளர்ந்து வரும் இளைய படைப்பாளியாக அவர்




கணிக்கப்பட்டாலும், இன்றைய இளைய படைப்பாளிகளில் பெரும்பாலானோர் இல்லாத இலக்கியத்திற்குத் தேவையான கடின உழைப்பும் விரிவான ஆராய்ச்சியும் அவர் வசம் உள்ளது.

அவர் தன் அனுபவங்களை நவீன கவிதை வடிவங்களில் இன்னும் சிறப்பாக வெளிப்படுத்துவார் என்று எனக்குத் தோன்றுகிறது, வாழ்க்கையின் போக்கில் அவருக்கு வரும் அனுபவத்தின் முதிர்ச்


ஹைக்கூ கவிதைகள் ஹைக்கூ கவிதைகள்

'ஹைக்கூ' சின்னதாய் இருக்கும் பெரிய அற்புதம். வடிவத்தைப் பார்த்தால் வாமனன் மாதிரி ஆனால் தாரை வார்த்ததுமே மிகப் பெரிதாய் விண்ணுக்கும் மண்ணுக்குமாய் விஸ்வரூபம் எடுத்து மூவுலகையும் அளந்து விடுகிறது.


ஹைக்கூ கவிதைகளாக ஈழத்தில் படைக்கப்பட்ட இரண்டாவது தொகுதி "உனக்குள்ளேயே உள்ளிருப்பு" ஆகும். சார்ள்ஸின் ஐந்தாவது கவிதைத் தொகுதியாகவும் முதலாவது ஹைக்கூ தொகுதியாகவும் விளங்குகின்றது. சார்ள்ஸ் (விக்கினேஸ்வரா ஐங்கரன்) இது வரை ஐந்து கவிதைத் தொகுதிகளைப் படைத்துள்ளார். அணையாத அறிவாலயம், விடியலின் கானம், இன்னமும் இருட்டினில், உறக்கம்தேடும் உலகிற்காய் ஆகியன சார்ள்ஸின் கவிதைத் தொகுதிகளாகும்.

ஹைக்கூவில் எழுந்த முதலாவது கவிதைத் தொகுதியாக மிளிர்வது மலையகத்தைச் சேர்ந்த சு. முரளிதரனின் "கூடைக்குள் தேசம்" ஆகும். ஆயினும் ஈழத்து தேசிய இனப் போராட்டத்தை முதன்மைப்படுத்தியும், சமூக யதார்த்தை வெளிப்படுத்தும் முதற்கவிதைத் தொகுதி" என சிறப்புமிகு நாடறிந்த கவிஞர் மேமன்கவி கூறுகின்றார்.

சி. இதற்கு இன்னொரு அடிப்படைக் காரணமும் உண்டு. அதாவது, மாறிய சூழலில் களப்பணியாளனாக, மரண பயத்தின் தருணங்களால் சூழப்பட்ட தீவு, அவர் சுற்றுச்சூழலை ஆத்மார்த்தமாக உள்வாங்கிய முறையே அவரது படைப்புகளின் இந்த சிறப்புக்கு அடிப்படை.

ஈழத்து நவீன கவிதையின் பாதையில் இந்த இளம் கவிஞரின் அடிச்சுவடுகள் குறிப்பிடத்தக்கவை என்பதை இத்தொகுப்பைப் படித்த அனுபவத்தின் மூலம் நீங்கள் அறியலாம்.

**- மேமன்கவி (1990 மே)**



# வந்தாறுமூலை ஸ்ரீ மகா விஷ்ணு தேவஸ்தான பிரமோற்சவ பெருவிழாவின் முதல் முறையாக தேரோட்டம்



















இந்துமா சமுத்திரத்தின் மத்தியில் முத்தென திகழ்கின்ற ஈழமணி திருநாட்டின் இயற்கை எளில்மிகு கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு வந்தாறுமூலை அருள்மிகு ஸ்ரீதேவி பூமிதேவி சமேத ஸ்ரீ மகா விஷ்ணு தேவஸ்தான பிரமோற்சவ பெருவிழாவின் முதல் முறையாக தேரோட்டம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

வந்தாறுமூலை அருள்மிகு ஸ்ரீதேவி பூமிதேவி சமேத ஸ்ரீ மகா விஷ்ணு தேவஸ்தான பிரமோற்சவ பெருவிழா ஆலய பிரதம குரு சைவ சிரோன் மணி விஷ்ணு பூஜா நவக்கிரக பூஜா துரந்தரர் சிவஸ்ரீ சட்சிநாதக் தெய் வேந்திரக் குருக்கள் தலைமையில் கடந்த 21ஆம் திகதி கொடியேற்றத்துடன் பெருவிழா ஆரம்பமாகி தேவஸ்தானத்தின் தேரோட்ட பெருவிழா பிரம்மோற்ச பிரதம குரு கற்குழி வவுனியா தேவி பூஜா துரந்தரர் சிவஸ்ரீ குக அரவிந்த குருக்கள் தலைமையில் முதல் முறையாக இடம்பெற்றதுடன் தேரோட்ட திருவிழாவினை வந்தாறுமூலை பெரிய பரமக்குடி மக்களினால் சிறப்பிக்கப்பட்டன.